முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் காலாங்கிநாதர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

11.03.2019, திங்கட்கிழமை

1. **சரவண சோதி ஏற்றி மக்களிடை**
**சத்திய நெறி பரப்பி அருளுகின்ற**
**சரவண சக்தியே அரங்கராசா**
**சகலரும் உன் வழியில் சரணடைய**

2. சரணடைய கலியுகம் பாதுகாப்பும்
சர்வபலமும் அடையுமெனக் கூறி
தரணியிலே நித்ய பிரசன்ன ஆசியை
தாமுரைக்க **விளம்பி சாலின் திங்கள்**

3. **திங்களிலே இருபானேழ் திகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 27ம் நாள் 11.03.2019, திங்கட்கிழமை)**
தேசிகனுக்கு காலாங்கிநாதர் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார குடில் நாடி வரும் மக்கள்

4. மக்கள் எல்லாம் ஞானிகள் ஆசிபெற
மரணம் வெல்லும் சக்தி பெறுவர்
தக்கதொரு அன்னதானமென்னும்
தருமநெறியை எல்லோரும் ஏற்று

5. ஏற்றுமே எங்கும் பரவிடும் வண்ணம்
ஏழாம்படை வீட்டு குருவருள்படவே
உற்றதொரு சேவை செய்து வர
உலகினில் தருமபலம் பெருகுவதுடன்

6. பெருகுமே மக்களிடை ஜீவதயவு
பெருந்தன்மையான குணநலன்களும்
பெருகியே சமூகத்தில் மக்களிடை
பிரச்சனை இல்லாத வாழ்வு நலம் காணும்

7. நலம் காணும் ஞானவழி காட்டும்
ஞானதேசிகன் தலைமை ஏற்க
பலம் கூடும் உலக ஆளுமையில்
பதவி மாந்தர்களிடையேயும் உயர்நிலை பெருகி

8. பெருகியே பொதுநல நோக்குடன்
பேராசை எதிர்மறை செயலில்லா
தருமசிந்தை தன்னார்வம் மிகுபட
தமிழகம் தொட்டு பேருலகமே

9. உலகமே ஞான ஆட்சியாக மாறும்
உலகமே ஆறுமுகப் பெருமான்
தலைமை மிகுந்த நல்லுலகம் ஆகும்
தவராசன் அரங்கமகான் வந்த

10. வந்த நோக்கமும் செயல்பாடும்
வையத்துள் முழுமைதனை பெற்று
சிந்தை தெளிவு திடம் மிக்கவர்களாய்
சேவை நோக்கில் மக்கள் திளைத்து

11. திளைத்து கலியுகம் தானும்
தெய்வீகம்மிக்க ஞானயுகமாகும்
வளமாகும் வையகம் ஞானபலமாகும்
வழங்கிய நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் காலாங்கிநாதர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

சரவண ஜோதி எனும் வல்லமைமிக்க அருட்பெருஞ்ஜோதி சுடரை ஏற்றி மக்களை வழிபட செய்து உலகினில் சத்தியநெறியினை பரப்பி அருள் செய்து காக்கின்ற சரவணசக்தியே முருகப்பெருமானின் அவதார ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகா உலகினர் அனைவரும் உமது வழியில் சரணடைந்திட இந்த பொல்லா மாமாயை சூழ் கலியுகமும் பாதுகாப்பை பெற்றிடுமப்பா, சர்வபலத்தினை அடையுமப்பா எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 27ம் நாள் 11.03.2019, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே உலகினில் முருகப்பெருமானின் ஞானஉலகம் அமைந்திடவே காலாங்கிநாதர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் காலாங்கிநாதர்.

சர்வ வல்லமைமிக்க ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வருகின்ற மக்களெல்லாம் ஞானிகளின் ஆசிகளை பெற்று மரணம் வெல்லுகின்ற தகுதியினையும் பெற்றிடுவார்கள். சர்வவல்லமைமிக்க தானமாகிய அன்னதானம் என்கிற தருமநெறியினை உலகோர் அனைவரும் ஏற்றுக் கொண்டு தொண்டுகள் செய்வதுடன் பொருளுதவியும் செய்து தர்மபலம் பெருகிட பாடுபடுவதுடன் உலகமெங்கும் பரவிடுமாறு ஏழாம் படை வீட்டு தலைவன் அரங்கமகா தேசிகனாரின் அருள் பார்வையாம் குருவருள் துணையுடன் தொடர்ந்து தொண்டுகளை செய்து வரவர, உலகினில் தருமபலம் பெருகி மக்களிடையே ஜீவதயவு பெருகி பெருந்தன்மைமிக்க குணநலன்கள் அதிகமாகி சமூகத்தினில் மக்களிடையே பிரச்சனைகள் ஏதும் இல்லாத அமைதியான வாழ்வு நலத்தினை பெற்று சிறப்படைவார்கள்.

ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமையினை ஏற்றுக் கொண்டு ஞானவழி காட்டும் அரங்கனின் கொள்கைகளை பின்பற்றி நடந்து வர, உலகினில் பலம் பெருகி உலகினை ஆட்சி செய்யும் தலைவர்களிடத்தும் உயர் பண்புகள் பெருகி பொதுநல நோக்குடன் பேராசை இல்லாத எதிர்மறை செயல்கள் இல்லாத தீவிரவாத போக்குகள் இல்லாத நாடாய் மாறி தர்மசிந்தையும் பொதுநலத்துடனும் சுயநலமற்ற தன்னார்வ சேவை மிகுதியாக செய்திடுவர்.

தன்னார்வ தர்மசேவை செய்து தர்மபலம் உலகினில் பெருகிட பெருகிட ஞானபூமியாம் தமிழகத்திலிருந்து துவங்கி இந்த பேருலகமே ஞானஆட்சியாக மாறிடும். உலகமே முருகப்பெருமானின் தலைமையில் மிகுந்த தர்ம உலகமாக நல்லுலகமாக மாறும். தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அவதார நோக்கமும் நிறைவேறும்.

அரங்கமகா தேசிகனாரின் தூயசெயல்பாடுகள் பெருகி அவையெல்லாம் உலகினில் முழுமையான வெற்றியை பெற்று மக்களுக்கு சிந்தை தெளிவு உண்டாகி மக்களெல்லாம் திடசிந்தை உடையவராகி சேவைகளைச் செய்து உலகை மேம்படுத்திட கலியுகமும் தெய்வீகம் மிகுந்த ஞானயுகமாக ஆவதோடு வளமான உலகமாக ஞானபலம் பெற்ற ஞானஉலகமாக இவ்வுலகம் கலியின் பிடியில் இருந்து விடுபட்டு உருவாகும் எனக் கூறுகிறார் மகான் காலாங்கிநாதர்.

–சுபம்–